

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், கண்ணமநாயக்கனூர் ஊராட்சி, பாலப்பம்பட்டி செல்வவிக்னேஷ் மஹாலில் விளையாட்டு வீரர்களுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் தலைமையில் காவேரிப்பட்டணம் ஒன்றிய ஓ.பி.எ.ஸ் அணியை சார்ந்த ஒன்றிய செயலாளர் கேபிள் சின்னசாமி ஏற்பாட்டில் அ.ம.மு.க. ஒன்றிய கழக செயலாளர் சின்னராஜ், ஐயப்பன், மணி, லோகா பிராமன் உள்ளிட்ட கால்வேஅள்ளி, கரடி அள்ளி, ஜெகதாப், சந்தாபுரம்,திம்மாபுரம், மலையண்டஅள்ளி, மிட்ட அள்ளி,எர்ர அள்ளி உள்ளிட்ட ஊராட்சிகளை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில் கழகத்தில் இனைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் செங்குட்டுவன், நாகராஜ், சீனிவாசன் , அன்பரசன் , கோவிந்தசாமி ,சாவித்திரி , பொருளாளர் கதிரவன் தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன் பாபு, அம்சவேணி செந்தில் குமார், மற்றும் கழக முன்னணியினர் ஏராளமான இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

# புதுக்கோட்டை வடக்கு - தெற்கு மாவட்ட கழகத்தினர் திருச்சியை நிறைத்திடுவோம்!

## மாவட்ட கழக செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி-கே.கே.செல்லப்பாண்டியன் அழைப்பு!

புதுக்கோட்டை, மார்ச் 9-

புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட கழகத்தினர் திருச்சியை நிறைத்திடுவோம் என்று திருச்சி மாநாட்டுக்கு கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி , புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர்.





இது குறித்து மாவட்ட கழக செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில்...

1949ஆம் ஆண்டு கொட்டும் மழை, இராபின்சன் பூங்காவில் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் தொடங்கப்பட்ட நமது இயக்கம், மக்களோடு கலந்து, மக்களுக்கு தொண்டாற்றி தமிழர்களை முன்னேற்றுகிற ஒரே

இயக்கமாக திராவிட முன் னேற்றக் கழகம் உருவான பின், 1956 ஆம் ஆண்டு, இதே திருச்சியில் கழகத்தின் மாநாட்டை நடத்தி, அதிலே கழகம், தேர்தலிலே போட்டியிடலாமா? என்று கழகத் தோழர்களிடம் வாக்கெடுப்பு நடத்தி, தேர்தலில் போட்டியிட்ட இந்திய ஒன்றியத்திலே ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

அதே திருச்சியில் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞ ரும் அன்பில் அழைக்கி றார்” என்று பலமுறை அழைத்து, நாம் பல மநாடுகளை கண்டிருக்கிறோம். ஏன் திருச்சியிலே திருப்புமுனை மாநாட்டையும் நாம் நடத்தி இருக்கிறோம்.

இந்திய ஒன்றியத்தை கபளிகரம் செய்து வரும் பாசிச பாரதிய ஜனதா கட்சி அரசும், அதன் அடிமையாம் எடப்பாடி அ.தி.மு.கவும், தமிழகத்தை மதவாத சக்தியிடம் அடிமைபடுத்திட நினைக்கும் அவர்களுடைய எண்ணத்தை முறியடித்து 2026 சட் டப்பேரவை தேர்தலில், கழகத்தின் வெற்றிக்கு கட்டியம் கூறப் போகும் மாநாடு தான், திருச்சி மாநாடு கழகம் 7வது முறை ஆட்சி அமைத்திடவும், நம்இனத் தலைவர், எட்டு கோடி தமிழர்களின் இதயநாயகன், உலகத் தமிழர்களின் ஒரே நம்பிக்கை, கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாம் முறை தமிழ்நாட்டின் அரியணை ஏறிட, புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட கழகத்தின் தீரர் கூட்டமே, மார்ச் 9ல் திருச்சியை நிறைத்திடு வோம்.

மாநாட்டில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைத்து சார்பு அணிகளின், மாவட்ட மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் என கழகத்தின் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொள்ள வேண்டுமென அழைக்கிறோம்.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி, கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# கழக மாநில மாநாட்டிற்கு அலைகடலென திரண்டு வாரீர்

## தஞ்சை மத்திய மாவட்ட செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை

தஞ்சாவூர், மார்ச் 9-

நாளை திருச்சியில் நடைபெற உள்ள மாநில மாநாட்டிற்கு தஞ்சை மத்திய மாவட்டத்தை சேர்ந்த கழக நிர்வாகிகள் அனைவரும் பெரு திரளாக கலந்து கொள்ள மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு :

இந்திய ஒன்றியத்தின் தனிப்பெரும் தலைவர், திராவிட மாடல் அரசின் நாயகர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இன்று (மார்ச் 9) (நாளை) தீரர் கோட்டமாம் திருச்சி சிறுகனூரில் 15 இலட்சத்திற்கும் அதிகமான கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்ள உள்ள கழக மாநில மாநாடு மிக பிரமாண்டமாக நடைபெற உள்ளது.

இதுகுறித்து கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உங்களின் ஒருவன் கடிதத்தின் மூலம் நமக்கு விடுத்த அன்பு கட்டளையை ஏற்று 2026 பொது தேர்தலில் கழக கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் கழகத் தலைவர் அவர்களை திராவிட மாடல் அரசின் 2.0 ஆட்சி கட்டிலில் அமர்த்தும் விதத்தில் இம்மாநாட்டில் நமது மத்தியமாவட்டத்திலிருந்து சுமார் 15 ஆயிரத்திக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதுசமயம் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் மாநாடு திடலுக்கு மதியம் 3மணிக்கு வந்து தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமர்ந்து இம்மாநில மாநாடு வெற்றியடைய செய்து தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் புதிய சகாப்தம் படைக்க, கழக தலைவரின் கரங்களை வலுப்படுத்தும் வகையில் மாநாட்டில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகர் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ.

# ஏற்காடு இளையகண்ணு கழகத்தில் இணைந்தார்!

## அமைச்சர் ஆர். ராஜேந்திரன் - எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. முன்னிலையில்!

சேலம், மார்ச் 9-

ஏற்காடு தொகுதி அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இளையகண்ணு அக்கட்சியில் இருந்து விலகி சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் மற்றும் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்பி ஆகியோர் முன்னிலையில் திமுகவில் இணைந்தார்.

அதிமுகவில் கட்சிக்காக உழைத்தவர்களுக்கு உரிய மரியாதை அளிக்கவில்லை என்றும் மத வாத பாஜகவிற்கு துணை போவதாலும் அதிமுகவில் இருந்து விலகி மக்கள் நலதிட்டங்களை செயல்படுத்தும் முதலமைச்சரின் கீழ் பணியாற்றிட உள்ளதாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தகவல் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்றும் மக்கள் நலத்திட்டங்களை கண்டு பல்வேறு மாற்று கட்சியினர் திமுகவில் இணைந்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக ஏற்காடு சட்டமன்ற தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட எம்ஜிஆர் மாவட்ட இணை செயலாளருமான இளைய கண்ணு அதிமுகவில் இருந்து விலகி சேலம் மத்திய மாவட்ட திமுக செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் மற்றும் சேலம் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் முன்னிலையில் நேற்று தி.மு.க.வில் இணைந்தார்.

திமுகவில் இணைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இளையகண்ணுவிற்கு அமைச்சர் ராஜேந்திரன் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் எஸ் ஆர் சி வி லிங்கம் ஆகியோர் பொன்னாடை அணிவித்து வரவேற்று வரும் சட்டமன்ற தேர்தலில் திமுக வெற்றிக்காக தொடர்ந்து பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த இளைய கண்ணு, முதலமைச்சரின் திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் குறிப்பாக கீழ்த்தட்டு மக்களுக்கும் முழுமையாக சென்றடைவதால் தாய் கழகத்தில் இணைந்துள்ளதாகவும், அதிமுகவில் தனது தந்தையும் சட்டமன்ற உறுப்பினராக இருந்துள்ளார் என்றும் கடந்த காலங்களில் கடுமையாக கட்சிப் பணியாற்றியவர்களுக்கு தற்போது உரிய மரியாதை அளிப்பதில்லை என்றும் மதவாத சக்தியான பாஜகவின் கை பாவையாக செயல்படும் எடப்பாடி பழனிச்சாமி செயல்பாட்டால் அதிமுகவினர் பலரும் அதிருப்தியில் உள்ளதாகவும் விரைவில் அதிமுகவிலிருந்து இருந்து 2000 த்திற்கும் மேற்பட்டோர் விலகி திமுகவில் இணைய உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் சேலம் கிழக்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர் சின்னதுரை அயோத்தியாபட்டினம் ஒன்றிய செயலாளர் விஜயகுமார் உள்ளிட்ட பலரும் உடன் இருந்தனர்.

# வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை!

## திராவிட மாடல் 2.0 அரசு அமைய 2 கோடி பெண்கள் ஆதரவு!

சென்னை, மார்ச் 9-

திராவிட மாடல் அரசின் மகளிர் நலத்திட்டங்களை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு சென்று சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் கழக மகளிரணியினரது வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஸ்டாலினின் மகளிர் படையினர் நேரடியாக மகளிரை சந்தித்து ஆதரவு திரட்டி வருகின்றனர். பிப்ரவரி 23 ஆம் தேதி தொடங்கப்பட்ட இப்பரப்புரையில் இதுவரை 2 கோடிக்கும் மேற்பட்ட பெண்களின் ஆதரவை திரட்டி உள்ளனர் ஸ்டாலினின் மகளிர் படையினர்.

இந்த புரப்புரையின் போது கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, கட்டணமில்லா விடியல் பயணம், புதுமை பெண் திட்டம் உள்ளிட்ட நலத்திட்டங்களால் பெண்கள் அடைந்து வரும் பயன்கள் விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டது.

கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்தால், இதுவரை 881 கோடி முறை பெண்கள் பயனடைந்துள்ளனர். ஒவ்வொரு மகளிரும் சுமார் ரூ60,000 வரை சேமித்துள்ளனர். வேலைக்குச் செல்லும் பெண்கள், கல்லூரி மாணவிகள், சந்தை செல்லும் இல்லத்தரசிகள் என அனைவரும் பயணச் செலவு சுமையிலிருந்து விடுதலை யடைந்துள்ளனர். “பேருந்துச் செலவை பற்றி கவலைபடாமல் சுதந்திரமாக போய் வர முடிவதாக “ பல பெண்கள் உணர்ச்சி பூர்வமாகத் தெரிவித்தனர்.

அதேபோல கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் பெண்களின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத் தொகையாக வழங்கி வருகிறது. தற்போது 1.31 கோடி பெண்கள் இத்திட்டத்தின் பயனாளிகளாக உள்ளனர். சமீபத்தில், முதலமைச்சர் அவர்களது உத்தரவுப்படி பிப்ரவரி மார்ச் ஏப்ரல் மாதங்களுக்கான ரூ.3,000 முன்பணத்துடன் கோடைக்கால சிறப்புத் தொகையாக ரூ.2,000 சேர்த்து ரூ.5,000 நேரடியாக வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

இது பெண்களின் குடும்பச் செலவுகளுக்கு, குழந்தைகள் கல்விக்கு, நல்ல உணவுப் பொருட்கள் வாங்க என பெரிதும் உதவியதாக இருந்ததாகவும் அடுத்து அமையவுள்ள திராவிட மாடல் 2. 0 அரசில் உரிமை தொகை ரூ2000 மாக உயர்த்தப்படும் என்ற வாக்குறுதி மகிழ்ச்சியை கொடுத்துள்ளதாகவும் பரப்புரையின் போது பெண்கள் தெரிவித்தனர்.

வீடு வீடாகச் சென்று இந்த சாதனைகளைப் பகிரும் மகளிரணி உறுப்பினர்கள், “திராவிட மாடல் அரசு பெண்களை சொந்தக் காலில் நிற்க வைத்துள்ளது. மீண்டும் ஸ்டாலின் ஆட்சி தொடர உங்கள் ஆதரவை அளியுங்கள்!” என ஆதரவு திரட்டி வருகின்றனர். இதுவரை 2 கோடி பெண்கள் திராவிட மாடல் அரசு தொடர தங்களின் ஆதரவை தெரிவித்துள்ளனர்.



கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் மாநகராட்சி ஆண்கள்மேல் நிலைப்பள்ளி வளாகத்தில், ரூ. 2.40 கோடி மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள நீச்சல் குளத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி திறந்து வைத்தார். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.இளங்கோ, க. சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், ஆணையர் சுதா மற்றும் மண்டல குழு தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் பென்னாகரம் பேருந்துநிலையம் அருகில் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி.தலைமையில் நடைபெற்ற ”தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் முன்னாள் துணை வேந்தர் முனைவர்.சபாபதி மோகன் எழுச்சி உரையாற்றினார்.கூட்டத்தில் முன்னாள் மாவட்ட செயலாளர்கள் தடங்கம்.பெ.சுப்ரமணி,பி.என்.பி.இன்பசேகரன்,பி.தருமச்செல்வன்,தொகுதி பார்வையாளர் பாரி மற்றும் பி.ஜே.பச்சியப்பன்,வீரமணி,என்.செல்வராஜ்,ஏ.கருணாநிதி,வைகுந்தம்,ஆர்.பி.செந்தில்குமார், ரேணுகாதேவி,சி.கிருஷ்ணகுமார்,இளைஞர் அணி கே.ஆர்.சி.செல்வராஜ்,அசோக்குமார்,மகளிர் அணி கவிதா மோகன்தாஸ்,முத்துலட்சுமி, பி.என்.பி. மேகனா முனியப்பன்,மருத்துவர் அணி பி.என்.பி.ராஜசேகரன்,ஐ.டி.விங் ஜெ.ராஜேஷ்,யாஸ்மின் உள்ளிட்ட ஏராளமான திமுகவினர்,பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் ஏற்காடு சட்ட மன்ற தொகுதி அ.தி.மு.க உறுப்பினர். இளை கண்ணு உட்பட 40 பேர் அக்கட்சியை விட்டு விலகி சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி. சேலம் மத்திய மாவட்ட செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்தனர். உடன் கிழக்கு மாவட்ட துணை செயலாளர். கு சின்னதுரை மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர். ஏ. ஏ. ஆறுமுகம். வாழப்பாடி சக்கரவர்த்தி அயோத்தியாபட்டணம் ஒன்றிய செயலாளர். விஜய குமார் நிர்வாகிகள். செந்தில் குமார். குமரவேல். அகரம் ராஜேந்திரன். ஹரி. முருகன், கே.எம்.ஆர். அண்ணாதுரை உட்பட நிர்வாகிகள் இருந்தனர்.